19th August 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Yes, Sir.

(ஆ) The petitioner, who is the hon. Member himself, was informed that the question of the assignment of the lands in the forest area of Kannivadi estate would be taken up for consideration after the introduction of ryotwari settlement in the estates areas in the Madurai district.

SRI M. A. B. ARUMUGHASAMY : ஸார், செட்டில்மெண்ட் முடியும் வரை, மேற்கண்ட நிலங்களில் விவசாயம் செய்து கொண்டிருப்பவர்களை, தொடர்ந்து விவசாயம் செய்து கொண்டிருப்பதற்கு சர்க்கார் அனுமதிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த செட்டில்மெண்ட் நடந்து தீர்ந்தால் தான் இந்த நிலங்கள் எல்லாம் யார் யாருக்கு என்று தெரியும். ஒருக்கால் டாங்க் புறம்போக்குகளோ, அல்லது 'டாங்க் பெட்' களோ இருந்தால் அவைகளை எப்படி அனுமதிப்பது ? அவ்விதம் ஏதாவது இருந்தால் அவர்களை அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

SRI M. A. B. ARUMUGHASAMY : 'டாங்க் பெட்' களிலோ, அல்லது காட்டு இலாகாவுக்கு உபயோகமில்லாத நிலங்களிலோ விவசாயம் செய்து வருபவர்களுடைய நிலைமையைக் கருதி அவர்களை அந்த இடங்களிலே விவசாயம் செய்வதற்கு சர்க்கார் அனுமதிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த விஷயம் செட்டில்மெண்ட் முடிந்த பின்னுல் தான் தெரியும். சர்க்காருக்கு இடைஞ்சல் இல்லாத இடங்களாக இருந்தால் அதை ஜாரி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

Hospital at Gingee

*283 *Q.*—SRI K. GOPALA KOUNDER : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சியில் உள்ள ஆஸ்பத்திரியில் புதிதாகக் கட்டப் பட்ட emergency வார்டில் நோயாளிகள் படுக்க படுக்கை வசதி யில்லாமலிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(ஆ) ஏன் இதுவரையில் படுக்கைகள் சப்ளை செய்யப்பட வில்லை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) and (ஆ) The ward has been functioning with borrowed cots from 31st January 1960. Necessary arrangements have been made to purchase cots for the ward.

SRI K. GOPALA KOUNDER : ஸார், ஜில்லா சுகாதார அதிகாரி ஒன்றரை வருட காலமாக டெண்டர் கோருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நாளது வரையிலும் எந்த

விதமான சாமான்களும் வந்து சேரவில்லை. ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி சாமான்களை தருவிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கேட்கப்பட்டிருக்கும் கேள்வி கட்டில்களைப் பற்றியது. இப்போது ஏதோ பக்கத்திலிருந்து கடன் வாங்கி உபயோகப்படுத்துகிறோம். புதிதாக கட்டில்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறோம். அவைகள் வந்தவுடன் கொடுக்கலாம்.

MR. SPEAKER : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் இப்போது சபையில் இல்லை. இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவார்கள். வந்தவுடன் 284-வது கேள்வியை எடுத்துக் கொள்ளலாம்.

Medico-herbal gardens

*285 *Q.*—SRI P. G. MANICKAM :
SRI S. M. ANNAMALAI : } கனம் ரெவின்யு அமைச்சர்
SRI M. P. SARATHI :
அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை ராஜ்யத்திலே எந்தெந்த இடங்களிலே பற்பல விதமான நோய்களைத் தீர்ப்பதற்கான மூலிகைகள் உற்பத்தி செய்யக்கூடிய தோட்டங்கள் இருக்கின்றன?

THE HON. SRI M. A. MANICKAVELU : Medicinal plants are cultivated in the Medicinal Farm at Arumbakkam attached to the Hospital of Integrated Medicine, Madras, and in the Government Cinchona Plantations in the Anamalais and in the Nilgiris.

SRI P. G. MANICKAM : ஸார், மூலிகைகளை அதிகமாக உற்பத்தி செய்யும் திட்டங்களை கிராமப் பஞ்சாயத்துக்களின் நேரடிப் பார்வையின் கீழ் கொடுக்கலாம் என்பதைப்பற்றி திட்டக்கமிஷன் ஆராய்ச்சி செய்ததைப்பற்றி சென்னை சர்க்காருக்கு ஏதாவது விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதன் பேரில் சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. இப்போது இரண்டு மூன்று இடங்களில் இந்த மூலிகை ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக்கள் எல்லாம் ஏற்பட்ட பின்னால் இவைகளைப் பஞ்சாயத்திளிடம் ஒப்படைப்பதைப்பற்றி ஆலோசனை செய்யலாம்.

SRI T. T. DANIEL : May, I know whether any research is being conducted on an all-State basis to find out the presence of valuable medicinal plants in various areas?